# கிருபையுள்ள வார்த்தை®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

VOL - 26
ஆண்டு சந்தா ரூ. 100/-

பிப்ரவரி - FEBRUARY
தனிப் பிரதி ரூ. 10/-

2026
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-




..அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.

1 தீமோத்தேயு 3:15

ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்






## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| வாலிபர் பகுதி | 9 |
| ஓராண்டில்... வேதவாசிப்பு | 11 |
| சிறுவர் பகுதி | 12 |



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

**ஆசிரியர் குழு**

V. கிங்ஸ்லி ராஜா, M.S. (IT&M)., M.Th.,
R. ஆண்டனி ராஜா, D.Th.,
E. ஜோசப் பிரதீப், B.Th., C. கியாமிலஸ் கார்த்திக், B.Sc.,
P. பேபி ராஜா, D.Th., P. பெவர்லி லிடியா B.B.A.,

**சட்ட ஆலோசகர்கள்**
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**
**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**
**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...**




மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி வழங்கப்படுகிறது.

**கிருபையுள்ள வார்த்தை**
ஒன்றான மெய் சபையில் நம்மை நிலைநிற்கச் செய்யும் மெய் பிதாவின் வார்த்தை

YouTube
@graciouswordcoc


**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

- P.C. பிலேமோன் ராஜா



# சபை என்றால் என்ன?
# What is Church?

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் இறைமைந்தன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில், எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

அன்பானவர்களே, இன்றைய நாட்களில் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவை பின்பற்றுகின்ற அநேகர் மனதில் எழும் கேள்வி, நூற்றுக் கணக்கான பிரிவில் சபைகள் இருக்கின்றன, இதில் எது சரியான சபை? என்பதாகும். எது சரியான சபை என்று அறிந்திட, சபை என்றால் என்னவென்று அறிவது முக்கியமானதாகும்.

**எக்லீசியா (EKKLESIA)** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து, சபை என்ற வார்த்தை வந்துள்ளது. இதன் பொருள், 'வெளியே அழைக்கப்பட்ட மக்கள் கூட்டம்' என்பதாகும். ஆகையால் சபை என்பது கட்டிடத்தையோ, இடத்தையோ மற்றும சமூக அமைப்பையோ குறிப்பிடாது! அது மக்கள் கூட்டத்தினையே குறிக்கும். சபை கூடியது, சபை கலைந்தது என வழக்கச் சொற்களை கேள்விபட்டிருப்பீர்கள். பொதுவாகவே, சபை என்பது மக்கள் கூட்டத்தினை குறிப்பதாகவே இருக்கின்றது.

கிபி 33ல், பெந்தெகொஸ்தே நாளில், எருசலேம் நகரில் முதன்முதலில், அப்போஸ்தலனாகிய பேதுரு யூத மக்களுக்கு, கிறிஸ்துவின் பாடு, மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய நற்செய்தியை பிரசங்கம் செய்கின்றார். அதனைக் கேட்டு, விசுவாசம் கொண்ட ஏறக்குறைய 3000 பேர், அன்றைய நாளிலே தங்கள் பாவ வாழ்விலிருந்து மனந்திரும்பி, பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெற்று இரட்சிக்கப்பட்டனர். அவ்வாறு இரட்சிக்கபட்ட மக்களைக் கொண்டு, அந்த நாளிலே கிறிஸ்துவின் சபையானது (கிறிஸ்துவினுடைய மக்கள் கூட்டம்) எருசலேமில் கிறிஸ்துவினாலே நிறுவப்பட்டது (அப்போஸ்தலர் 2ம் அதிகாரம்). இது தான் முதல் சபை (ஆதி சபை).

பிறகு, முதலாம் நூற்றாண்டிலே கிறிஸ்துவின் நற்செய்தி எங்கெல்லாம் பிரசங்கம் பண்ணப்பட்டதோ, அங்கெல்லாம் மக்கள் நற்செய்திக்கு கீழ்ப்படிந்து, பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெற்றனர். அவ்வாறு திருமுழுக்கு பெற்று, இரட்சிக்கப்பட்ட மக்கள், அந்தந்த பட்டணங்களிலே கிறிஸ்துவினுடைய சபையாகக் கூடி வந்தனர். இவ்வாறு அந்ததந்த பட்டணங்களில் கிறிஸ்துவின் சபை ஆரம்பிக்கப்பட்டது என்பதனை அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் முழுவதும் நாம் படித்து அறியாலம்.

பரிசுத்த ஆவியினால், சகல சத்தியத்தோடும் வழிநடத்தப்பட்ட அப்போஸ்தலர்கள், கிறிஸ்துவின் தூய்மையான போதனைகளை எந்தவித கலப்படமுமின்றி உலகமெங்கும் கொண்டு சேர்த்தனர். அதனால், முதல் 600 ஆண்டுகள் அந்த ஒரே சபை தான் உலகமெங்கும் ஏற்படுத்தப்பட்டது. ஆகையால், சபை என்பது எந்த ஒரு பிரிவினை பெயர்களிலும் அழைக்கப்படாமல், கிறிஸ்து தன்னுடைய இரத்தத்தினை சிந்தி ஏற்படுத்தினபடியினால், அவரை மகிமைப்படுத்தும்படி அவருடைய பெயரையே தாங்கி, 'கிறிஸ்துவின் சபை' என்று அழைக்கப்பட்டது (ரோமர் 16:16). ஒரே சபை

வெவ்வெறு பட்டணங்களில் இருந்தபடியினால், அவர்களை அடையாளப்படுத்த கொரிந்து சபை, எபேசு சபை, சிமிர்னா சபை என்று இடங்களை சொல்லி அழைக்கப்பட்டனர் என்பதனை நாம் பைபிளிலிருந்து அறிய முடிகின்றது.

ஆயினும் சபையின் முக்கியத்துவத்தினை நாம் அறிய, சபை கிறிஸ்துவின் உடல் (கொலோ 1:18) என்றும், பரம பிதாவின் குடும்பம் (1தீமோ 3:15) என்றும், கர்த்தருடைய மந்தை (1பேதுரு 5:2) என்றும், கர்த்தருடைய திராட்சைத்தோட்டம் (யோவான் 15:1-8) என்றும், கிறிஸ்துவின் மணவாட்டி (2கொரி 11:2) என்றும், எதிர்காலத்தில் பரிசுத்த ஆண்டவர் இயேசு அதனை பரம பிதாவிடம் ஒப்படைக்க இருப்பதால் (1கொரிந்தியர் 15:24), அது தேவனுடைய அரசு (ராஜ்ஜியம்) (2தெசலோனிக்கேயர் 1:5) என்றும் பல்வேறு வகையில் திருமறையில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும், கிறிஸ்துவின் சபை என்பது சாதாரணமானது அல்ல, பரம பிதா இந்த உலகத்தினை படைக்கும் முன்பே திட்டமிட்ட ஒன்றாகும் (எபேசியர் 1:3-23). அது அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவுக்குள் அவர் கொண்டிருந்த அநாதி தீர்மானமாக (முடிவாக) இருந்துள்ளது (எபேசியர் 3:9-21). அப்படி யென்றால், சபையை உண்டாக்குவதற்காகத் தான், பரம பிதா, இந்த அண்டசராசரங்கள் அனைத்தினையும், அதிலுள்ள உயிர்களையும் உண்டாக்கியுள்ளார். சபைக்காகத் தான் உலகம் படைக்கபட்டுள்ளது. இந்த உலகத்திற்காக சபை உண்டாக்கப் படவில்லை. சபை என்பது இந்த உலகத்திற்கு உரியதும் அல்ல (யோவான் 19:36), என்பதனை நாம் அறிய முடிகின்றது.

அடுத்ததாக, தனது திட்டத்தினை பரம பிதாவானவர், நேரடியாகவும் (ஆதியாகமம் 3:15), பரிசுத்தவான்கள் மூலமாகவும் (ஆதியாகமம் 49:8-12), தீர்க்கதரிசிகளைக் கொண்டும் (ஏசாயா 2:1-4; தானியேல் 2:37-45; யோவேல் 2:28-32) பல நூற்றாண்டுகளாக முன்னுரைத்தார்.

பிறகு, ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாக சபையை வாக்குத்தத்தம் செய்தார் (மத்தேயு 16:16-19, மாற்கு 9:1-2, லூக்கா 24:45-50, அப்போஸ்தலர் 1:3-10), அதன் பிறகு தனது குமாரன் மூலமாக, அதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நிறுவினார் (அப். 2). மேலும், அந்த சபை பலுகி பெருக பரிசுத்த ஆவியானவர் கொண்டு கடவுள் உதவினார் (அப்போஸ்தலர் 9:31).

பரிசுத்த பரம பிதா திட்டமிட்டு, தீர்க்கதரிசனம் உரைத்து, வாக்குத்தத்தம் செய்து, தனது குமாரனை பலியாக ஒப்புக்கொடுத்து, அவர் மூலமாக சபையை உண்டாக்கினாரென்றால், பிதாவிற்கு சபை என்பது எவ்வளவு முக்கியமானதாக இருக்கின்றது என்பதை அறிய முடியும். பரிசுத்த ஆண்டவர் இயேசு பரலோக மகிமையை விட்டிறங்கி, சாதாரண மனிதனாகப் பிறந்து, எல்லா வகையிலும் அவமானம், துன்பம், துயரப்பட்டு, தனது இன்னுயிரை சிலுவையில் ஈந்து, சபையை உண்டாக்கினார் என்றால், கிறிஸ்துவிற்கு சபை என்பது எவ்வளவு முக்கியமானதாக இருக்கின்றது என்பதை அறியலாம்.

இப்படிபட்ட மகிமையான பரிசுத்த சபையைப் பற்றி, எல்லா சபையும் ஒன்று தான், எந்த சபைக்கு போனாலும் பரவாயில்லை, ஒரு நாள் சபை கூடுகைக்கு போகவிட்டால் ஒன்றுமில்லை என, நாம் சாதாரண எண்ணம் கொண்டிருக் கலாமா? இந்த மகிமையான கிறிஸ்துவின் சபையை பற்றி, இன்னும் அறிந்துகொள்ள, உங்களுக்கு உதவ நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம். பரிசுத்த பிதாவானவர் அந்த ஒன்றான மெய் சபையை நீங்கள் வேத வசனத்தின் வெளிச்சத்தில், பரிசுத்த ஆவியின் உதவியுடன் அடையாளங்காண உதவுவராக! ஆமென்.

– அன்புடன், ஆசிரியர்

புதிய ஏற்பாட்டு சபை: கிறிஸ்துவின் சபை, எருசலேமில் கி.பி 33-ல் கிறிஸ்துவினால் ஆரம்பிக்கப்பட்டது.

## பிரிவினை சபை கூட்டங்களின் ஆரம்பம்

| பெயர் | இடம் | வருடம் | ஆரம்பித்தவர் |
|---|---|---|---|
| ரோமன் கத்தோலிக்கம் | ரோம், இத்தாலி | 606 | குழு |
| க்ரீக் ஆர்த்தோடெக்ஸ் சர்ச் | க்ரீஸ் | 1053 | குழு |
| மொரவியன் சர்ச் | குன்வால்ட், பொகேமியா | 1457 | குழு |
| மெனோனைட் சர்ச் | சூரிச், சுவிட்சர்லாந்து | 1525 | குழு |
| லூத்தரன் சர்ச் | ஆக்ஸ்பெர்க், ஜெர்மனி | 1530 | மார்டின் லூத்தர் |
| சர்ச் ஆப் இங்கிலாந்து | இங்கிலாந்து | 1535 | ஹென்றி அரசர் VIII |
| ப்ரெஸ்பட்டேரியன் சர்ச் | சுவிட்சர்லாந்து | 1535 | ஜான் கால்வின் |
| டச் ரீஃபார்மெட் சர்ச் | ஹாலாந்து | 1560 | குழு |
| பாப்திஸ்து | லண்டன், இங்கிலாந்து | 1607 | ஜான் ஸ்மித் |
| அமெரிக்கன் பாப்திஸ்து | ப்ரொவைடன்ஸ் | 1639 | ரோஜர் வில்லியம்ஸ் |
| க்வாக்கர்ஸ் | இங்கிலாந்து | 1650 | ஜியார்ஜ் ஃபாக்ஸ் |
| காங்கிரிகேஷனல் சர்ச் | மாஸாச்சுசெட்ஸ் | 1684 | குழு |
| யுனிடாரியன்ஸ் | போலாந்து | 16ம் நூற்றாண்டு | ஃபாஸ்டஸ், சொசினஸ் |
| பிரதரன், ட்ரங்கார்ட்ஸ் | ஸ்வர்சென்யூ , ஜெர்மனி | 1708 | ஹோச்மேன் ரூ மேக் |
| மெத்தடிஸ்ட் சர்ச் | லண்டன், இங்கிலாந்து | 1729 | ஜான்வெஸ்லி |
| ப்ரிமிட்டிவ் பாப்திஸ்து | வடக்கு கரொலினா | 1765 | குழு |
| யுனிவர்சலிஸ்ட் | நியூ ஜெர்சி | 1770 | ஜான் முர்ரே |
| ஃப்ரீ வில் பாப்திஸ்து | நியூ டர்க்கம் | 1780 | பெஞ்சமின் ரான்டல் |
| இவாஞ்சலிகல் சர்ச் | பென்சைல்வேனியா | 1803 | ஜேக்கப் ஆல்பிரைட் |
| ஹம்பெர்லாண்ட் பிரஸ்பட்டேரியன் | டிக்சன் கன்ட்ரீ | 1810 | குழு |
| பிரதரன் இன் க்ரைஸ்ட் | அமெரிக்கா ஐக்கிய நாடுகள் | 1820 | குழு |
| ப்ளைமவுத் ப்ரதரன் | டப்ளின், அயர்லாந்து | 1829 | குழு |

| | | | |
|---|---|---|---|
| கத்தோலிக்க அப்போஸ்தல சபை | இங்கிலாந்து | 1830 | குழு |
| மெர்மோன் சர்ச் | செனகா | 1830 | ஜோசப் ஸ்மீத் |
| அட்வென்டிஸ்ட் | மாஸாச்சுசெட்ஸ் | 1831 | வில்லியம் மில்லர் |
| க்ரைஸ்ட் அடல்பியன்ஸ் | அமெரிக்கா ஐக்கிய நாடுகள் | 1844 | ஜான் தாமஸ். M.D. |
| செவன்த் டே அட்வென்டிஸ்ட் | மாஸாச்சுசெட்ஸ் | 1846 | எல்லன் G.ஒயிட் |
| ஸ்பிரிச்சுவலிஸ்ட் சர்ச் | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 1848 | ஆன்ட்ரூ J. டேவிட் |
| மெர்மோன் சர்ச் ரெகக்னைஸ்ட் | விஸ்கான்சின் | 1852 | ஜோசப் ஸ்மீத் – II |
| கிறிஸ்டியன் சர்ச் | மிட்வே | 1859 | குழு |
| நியூ அப்போஸ்தல சர்ச் | ஹம்பெர்க், ஜெர்மனி | 1862 | ப்ரூஸ் |
| இரட்சண்ய சேனை | லண்டன், இங்கிலாந்து | 1865 | வில்லியம் பூத் |
| யெகொவா சாட்சிகள் | பென்சைல்வேனியா | 1874 | சார்லஸ் T. ரஸ்ஸல் |
| தியோஃசோபிகல் சொசைட்டி | நியூயார்க் சிட்டி | 1875 | ஹெலனா ப்லவட்ஸ்கை |
| கிறிஸ்டியன் சைன்ஸ் | பாஸ்ட்டன் | 1879 | மேரி பேகெர் எட்டீ |
| சர்ச் ஆப் காட் | அமெரிக்கா ஐக்கிய நாடுகள் | 1880 | D.W. வார்னர் |
| சர்ச் ஆப் காட் | மான்ரோ கன்ட்ரி | 1886 | குழு |
| தி யுனைட்டி ஸ்கூல் | கன்சஸ் சிட்டி | 1889 | சார்லஸ் ஃபில்மோர் |
| ஜீவனுள்ள தேவ சபை | ரைட்ஸ்வில்லே | 1889 | வில்லியம் கிறிஸ்டியன் |
| நசரேயன் சர்ச் | லாஸ் ஏஞ்சல்ஸ் | 1895 | B.F. ப்ரெஸி |
| பில்கிரிம் ஹோலினெஸ் சர்ச் | சின்சினாட்டி | 1897 | குழு |
| பெந்தேகொஸ்தே ஹோலினெஸ் | ஆன்டர்சன் | 1898 | குழு |
| அப்போஸ்தல விசுவாச மிஷன் | அமெரிக்கா ஐக்கிய நாடுகள் | 1900 | குழு |
| இன்டிபென்டன்ட் ஹோலினெஸ் | வான் ஆல்ஸ்டைன் | 1900 | C.B.ஜெர்னிகன் |
| தாவீதின் வீடு | மிச்சிகன் | 1903 | குழு |
| ஹோலினெஸ் சர்ச் | சிகாகோ | 1907 | ஹோவார்ட் ஹஒப்ல் |
| அசெம்ப்ளி ஆப் காட் | ஹாட் ஸ்பிரிங்ஸ் | 1914 | குழு |
| சர்ச் ஆப் காட் (Hol) | அட்லாண்டா | 1914 | K.H.புர்ருஸ் |
| ஃபோர்ஸ்கொயர் காஸ்பல் | லாஸ் ஏஞ்சல்ஸ் | 1917 | எய்மீ S. மெக்பெர்சன் |
| இவாஞ்சலிகல் மற்றும் ரீஃபார்மெட | க்ளெவ் லாண்ட் | 1934 | குழு |
| ஃபுல் காஷ்பல் சர்ச் | கோல்ட்ஸ்போரோ | 1935 | R.H.ஆஸ்கே |

# என் ஆத்தும நேசர்!!

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளே! பரிசுத்த ஆண்டவர் இயேசு ராஜாவின் பெயரில் வாழ்த்துக்கள்! ஜெபங்கள்!

அன்பானவர்களே! அநேக வேளையிலே நம் வாழ்க்கை அமைதியாகவும், ஒழுங்காகவும் தோன்றலாம். ஆனால் அந்த அமைதிக்குள் பல போராட்டங்கள், சொல்ல முடியாத கண்ணீர், பகிர முடியாத வேதனைகள் மறைந்திருக்கும். மகளாக, மனைவியாக, தாயாக, மருமகளாக ஒவ்வொரு நிலையிலும் பெண்கள் தியாகம் செய்கின்றோம். ஆனால், சில நேரங்களில் நம் அன்பும், பொறுமையும், உழைப்பும் அங்கீகரிக்கப்படாமல் போகிறது. ஆனால் நம்மை இந்த உலகம் புரிந்து கொள்ளாத நேரத்தில் மனிதர்கள் விட்டு விலகும் தருணத்தில், நம் உள்ளத்தை முழுவதும் அறிந்து, நிபந்தனை இல்லாமல் நம்மை நேசிப்பவர் இயேசு கிறிஸ்து ஒருவரே "என் ஆத்தும நேசர்" அவர் நம் வாழ்வில் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை தெரிந்து கொள்வோம்.

"...அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன்." (எரே. 31:3).

**என்னை முழுமையாக அறிந்தவர்:**

நம் உள்ளத்தில் இருக்கும் போராட்டங்கள் பெரும்பாலும் வெளியில் தெரிவதில்லை. ஒரு சிரிப்புக்குள் கண்ணீர், ஒரு அமைதிக்குள் வேதனை மறைந்திருக்கும். ஆனால் என் ஆத்தும நேசர் என் உள்ளத்தை முழுவதும் அறிந்தவர் என்ற தைரியம் நமக்கு இருக்க வேண்டும். "தேவன் அதை ஆராய்ந்து, விசாரியாதிருப்பாரோ? இருதயத்தின் அந்தரங்கங்களை அவர் அறிந்திருக்கிறாரே." (சங். 44:21).

மனிதர்கள் நம்மை வெளிப்படையான தோற்றத்தின் அடைப்படையில் மதிப்பிடுவார்கள். ஆனால் தேவன் நம்மை உள்ளத்தின் அடிப்படையில் பார்ப்பவர். "...மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்." (1சாமு. 16:7).

பிரியமானவர்களே, நீங்கள் யாரிடமும் சொல்ல முடியாத பாரங்கள் இருந்தால், அவை அனைத்தையும் "என் ஆத்தும நேசரிடம்" சொல்லலாம் என்ற மனோ தைரியத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**என்னை சுமக்கும் நேசர்:**

குடும்பத்தின் அடித்தளமாக இருக்கும் பெண்கள், வீட்டின் தேவை, குழந்தைகளின் எதிர்காலம், கணவரின் நலன், பெற்றோரின் மீது பாசம் எல்லாவற்றையும் அமைதியாக சுமக்கிறார்கள். அந்த சுமை அதிகமாகும்போது "என் ஆத்தும நேசர்" என்னோடு இருக்கிறார் என்ற நம்பிக்கை வேண்டும். "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்." (1பேதுரு 5:7).

சோர்வடைந்த நேரங்களில் அவர் நம்மை தனியாக விடுவதில்லை. "நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்." (சங். 34:18).

பெண்களே, நீங்கள் தளர்ந்துபோன நேரத்தில் உங்கள் பலவீனம் தேவனுக்குத் தடையல்ல. அது அவருடைய வல்லமை வெளிப்பட வாய்ப்பாகும். "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்." (2கொரி. 12:9).

**என்னை மதிப்பிட்டு உயர்த்துபவர்:**

இந்த உலகம் நம்மை நமது தோற்றம், திறமை

(தொடர்ச்சி... 9ம் பக்கம்)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ" மௌவல்



மௌவல் எனச் சங்ககாலத்தில் வழங்கப்பட்ட மலரை இக்காலத்தில் மரமல்லி (மரமல்லிகை), 'பன்னீர்ப் பூ' எனவும் வழங்குகின்றனர். இது வீட்டில் வளர்க்கப்படும் மரம்.

இந்த மலரின் அரும்புகள் மகளிரின் பல் வரிசைக்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளன. இப்பூ வருடத்திற்கு இரு முறை பூக்கும். மலர்கள் மிகுந்த வாசனையை கொண்டது. இப்பூவைக் கொண்டு மாலைகளும், மலர் அலங்காரங்களும் செய்யப்படுகின்றன. இம்மரம் 18 முதல் 25 மீட்டர் வளரக்கூடியது. 6 முதல் 8 வருடங்களில் மரமாகி 40 வருடங்கள் வரை இருக்கும். பல மண் வகைகளில் வளரக்கூடியவை.

ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடுகிறது. ஆனால் "என் ஆத்தும நேசர்" என்னை விலைமதிப்புள்ளவளாகக் காண்கிறார். "நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன்.." (ஏசாயா 43:4). தள்ளப்பட்ட நேரத்தில், அவமதிக்கப்பட்ட சூழ்நிலையிலும் அவர் என்னை உயர்த்துகிறார். "தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார்; இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்." (லூக். 1:51,52).

வேதாகமத்தில் தேவன் உயர்த்திய பெண்களை நினைவுகூருங்கள். அன்னாள், எஸ்தர், மரியாள் இவர்களின் கண்ணீரையும், விசுவாசத்தையும் தேவன் மறக்கவில்லை. "கர்த்தருக்குக் காத்திருக் கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்." (ஏசாயா 40:31).

### என்றும் மாறாதவர்:

மனித உறவுகள் மாறலாம்; சூழ்நிலைகள் மாறலாம். என் ஆத்தும நேசர் ஒருபோதும் மாறாதவர். "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்." (எபி. 13:8). எதுவும் நம்மை அவருடைய அன்பிலிருந்து பிரிக்க முடியாது (ரோமர் 8:38,39).

பிரியமானவர்களே! நம் வாழ்வில் நாம் எந்த நிலையில் இருந்தாலும் "ஆத்தும நேசரின்" கரங்கள் நம்மை பாதுகாக்கின்றது.

### தினந்தோறும் நேசருடன்:

ஆத்தும நேசரை அறிந்துக்கொண்ட நான் அவரோடே தினந்தோறும் நடப்பதே நம் வாழ்வில் ஆசீர்வாதம் (யோவா. 17:21; மத். 28:20; எபே. 5:30-32). தலையாகிய கிறிஸ்துவும், சரீரமாகிய சபையும், சபைக்குள் அவயவங்களாக இருக்கும் அங்கத்தினராகிய நாமும் - ஜெபம், வேதாகம தியானம், நம்பிக்கை நிறைந்த வார்த்தைகள், இவை அனைத்தும் ஆத்தும நேசருடன் உள்ள நம் உறவை ஆழப்படுத்தும். "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்." (சங். 37:5).

ஆம், பிரியமானவர்களே! இந்த உலகம் நம்மை மறந்தாலும், மதிப்பிடாவிட்டாலும் என் ஆத்தும நேசர் என்னை மறக்கவில்லை. என் கண்ணீர் அவருக்கு விலையுயர்ந்தது. அதை அவர் கணக்கிடுகிறார், அவர் என்னை பாதுகாக்க விரும்புகிறார் என்ற மனநிறைவோடே நாம் தொடர்ந்து வாழ்வோம்.

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்." (சங். 23:1). "என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்.." (உன்னத. 2:16). கர்த்தரின் கிருபையோடு, அடுத்த இதழில் சந்திப்போம்!

சகோதரி. பெவர்லி கிங்ஸ்லி

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil: Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am. **Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil: Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program: Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

# புதிய துணி, புதிய திராட்சை ரசம் - புதிய உடன்படிக்கை

**லூக்கா 5:36-39**

பிரியமான வாலிபர்களே! இயேசுகிறிஸ்துவின் உவமைகளில் ஒன்றை இந்த மாதம் தியானிப்போம். இயேசு கலிலேயாவில், தம் ஊழியத்தை நற்செய்தியால் அறிவிக்கத் தொடங்கியபோது, இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது, மனம்மாறுங்கள் என்று அறிவித்தார். அவர் புதிய உண்மைகளை அதிகாரத்துடன் அறிவித்தபடியால், சிலர் வியப்படைந்தனர், பலர் கோபமடைந்தனர்.

வரிவசூலிப்பவராகிய மத்தேயு இயேசுவின் சீடரானார். அவர் தம் வீட்டில் இயேசுவுக்கு விருந்தளித்தார். இயேசுவும் அவருடைய சீடர்களும் விருந்துண்பதைக் கண்டு, பரிசேயரும், திருச்சட்ட அறிஞர்களும் எரிச்சல் அடைந்தார்கள். ஏனென்றால், பரிசேயரின் சீடர்களும், யோவானின் சீடர்களும் வாரத்திற்கு இரண்டுநாள் உபவாசம் இருந்தார்கள். மக்கள் அனைவரும் பார்க்கும்படி, முகவாட்டத்துடனும், தலையை சீவாமலும், திருச்சட்டத்தின் சடங்குகளை வெளிப்படையாகச் செய்து, தம்மை நேர்மையாளர் என்று மக்களுக்கு அறிவித்தார்கள்.

எனவே, பரிசேயரும் மறைநூல் அறிஞரும் இயேசுவைப் பார்த்து, உம்முடைய சீடர் உண்பதும் குடிப்பதுமாக இருக்கின்றனரே, ஏன் உபவாசிப்பதில்லை? என்று குறைகூறினார்கள்.

**புதிய உடன்படிக்கையை இயேசு அறிவித்தார்:** இயேசு அவர்களை நோக்கி, இது விரதம் இருக்கும் நேரமல்ல, மகிழ்ச்சியான மணவிருந்தின் நேரம் என்றும், தம்மை மணவாளன் என்றும் அறிவித்தார். இஸ்ரயேலருக்கு அளிக்கப்பட்ட பழைய உடன்படிக்கை முடிந்துவிட்டது என்பதும், இறையாட்சியின் நற்செய்தியே புதிய உடன்படிக்கை என்பதும் இந்த உவமையில் அறிவிக்கப்படுகிறது.

**பழைய உடன்படிக்கையும் புதிய உடன்படிக்கையும் பற்றிய உவமை:** எவரும் பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப் போடுவதில்லை. ஏனெனில் அவ்வாறு ஒட்டுப்போட்டால், அந்த ஒட்டு புதிய ஆடையைக் கிழித்துவிடும். கிழிசலும் பெரிதாகும். புதிய துண்டு பழையதோடு பொருந்தாது.

அதுபோலப் பழைய தோற்பையில், எவரும் புதிய திராட்சை ரசத்தை ஊற்றி வைப்பதில்லை. ஊற்றி வைத்தால் புதிய ரசம் தோற்பையை வெடிக்கச் செய்யும், ரசமும் சிந்திப்போகும், தோற்பையும் பாழாகும். புதிய ரசத்தைப் புதிய தோற்பைகளில்தான் ஊற்றி வைக்க வேண்டும். அப்போது இரண்டும் வீணாய்ப் போகாது. மேலும் பழைய திராட்சை ரசத்தைக் குடித்தவர் எவரும் புதியதை விரும்பமாட்டார். ஏனெனில், பழையதே நல்லது என்பது அவர் கருத்து (லூக்கா 5: 36-39).

**பழைய ஆடை, பழைய திராட்சை ரசம் என்ன?** சீனாய் மலையில் கடவுள் இஸ்ரயேலருக்குத் திருச்சட்டத்தை (நியாயப்பிரமாணம்) கொடுத்து முதல் உடன்படிக்கை செய்தார். அது திருமுழுக்கு யோவானோடு முடிவடைந்தது. திருச்சட்டமும் எல்லா இறைவாக்கு நூல்களும் யோவான் வரும்வரை இறைவாக்குரைத்தன (மத்தேயு 11:13). எனவே, திருச்சட்டங்களும் இறைவாக்குகளும் பழைய துணி என்றும் பழைய திராட்சை ரசம் என்றும் இயேசு அறிவித்தார். இவ்வாறு, இஸ்ரயேலருடன் கடவுள் செய்த முதல் உடன்படிக்கை, இயேசுவுக்குப்பின், பழைய உடன்படிக்கையாக மாறியது.

புதிய ஆடை புதிய திராட்சை ரசம் என்ன? இறையாட்சியின் நற்செய்தியே புதிய உடன்படிக்கை. அதுவே புதிய ஆடையாகவும், புதிய திராட்சை ரசமாகவும் இருக்கிறது.

புதிய ஆடையிலிருந்து ஒரு துண்டைக் கிழித்து, அதைப் பழைய ஆடையோடு ஒட்டுப் போட்டால் புதிய ஆடையும் கிழியும்; அந்த ஒட்டு பழைய ஆடையை கிழித்துவிடும்


**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
Ph.No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

பழைய உடன்படிக்கையின் திருச்சட்டங்களையும், புதிய உடன்படிக்கையின் நற்செய்தியையும் ஒட்டுசேர்த்து, நாம் விரும்பியபடி கைக்கொண்டால், இரண்டுமே பயனற்றுப்போகும்.

புதிய திராட்சை ரசம், புதிய தோற்பைகளுக்கே ஏற்றது. இயேசுவின் இறையாட்சியைப் பெறவேண்டுமானால், புதிய உடன்படிக்கையின் நற்செய்தியை அறிந்து, மனம்மாறி, புதிய தோற்பையாக மாறவேண்டும். மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது என்று இயேசு நிக்கொதேமிடம் கூறினார் (யோவான் 3:3; அப். 2:32). புதிய திராட்சை ரசத்தை பழைய தோற்பைகளில் ஊற்றி வைத்தால் புதிய திராட்சை ரசம் தோற்பைகளை வெடிக்கச் செய்யும். தம் பாவங்களை அறியாதவர்களும், மனம் மாறாதவர்களும் இயேசுவின் இறையாட்சியை உள்ளத்தில் ஏற்கமுடியாது. (மத். 7:21; மாற்கு 16:15,16).

பழைய திராட்சை ரசத்தைக் குடித்தவர் எவரும் புதியதை விரும்பமாட்டார். ஏனெனில் பழையதே நல்லது என்பது அவர் கருத்து. பழக்க வழக்கங்களை விட்டுவிட எவரும் விரும்புவதில்லை. இஸ்ரயேலில் இருந்த தலைவர்களும், பரிசேயர்களும் பழைய ரசமாகிய திருச்சட்டங்களின் சடங்குகளைக் கைக்கொள்ளவே விரும்பினார்கள். இயேசுவிடம் குறைகளைத் தேடிப்பிடித்து, தம்மை இயேசுவைவிட நேர்மையாளர் என்று அறிவித்தார்கள். எனவே, நிலைவாழ்வை இழந்தார்கள். உங்களிடமிருந்து இறையாட்சி அகற்றப்படும்; அவ்வாட்சிக்கு ஏற்ற முறையில் செயல்படும் ஒரு மக்களினத்தார் அதற்கு உட்படுவர் என்று இயேசு அறிவித்தார் (மத்தேயு 21:43).

கடவுளுக்கு ஏற்புடையவர்களாகுமாறு இஸ்ரயேல் மக்கள் திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்க முயற்சி செய்த போதிலும் அவர்கள் வெற்றி பெறவில்லை. இதன் காரணம் என்ன? அவர்கள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொள்ளாமல் (திருச்சட்டத்தின்), செயல்களின் அடிப்படையில் முயற்சி செய்தார்கள். எனவே தடைக்கல்லின் மேல் தடுக்கி விழுந்தனர் என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார் (ரோமர் 9:31-32). புதிய திராட்சை ரசத்தையும், பழைய திராட்சை ரசத்தையும் கலந்து குடிக்கும் இக்கால மக்கள், பழைய உடன்படிக்கை இஸ்ரயேலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது; அது யோவானோடு முடிவடைந்தது என அறியவில்லை. ஆனால், இக்காலத்தில் பிறஇனத்தாராகிய பலர். முடிந்துபோன பழைய உடன்படிக்கையின் பழைய திராட்சை ரசத்தை விரும்பிக் குடிக்கிறார்கள். பழைய ஆடையில் புதிய துண்டை ஒட்டுகிறார்கள். பரிசேயரைப்போல், பழையதே நல்லது என்றும் அறிவிக்கிறார்கள். ஏனென்றால், இயேசுவின் புதிய ரசமாகிய புதிய உடன்படிக்கை அந்த வெளிவேடக் காரர்களை கிழித்துவிடுகிறது.

**புதிய உடன்படிக்கைபடி இறையாட்சிக்குள் ஒருவர் வர:**

1. சத்தியத்தை (கிறிஸ்துவின் சுவிசேஷத்தை) கேள்விப்பட வேண்டும் (எபே. 1:13).
2. சத்தியத்தை விசுவாசிக்க வேண்டும் (யோ. 20:31; ரோமர் 10:17).
3. பாவ வாழ்வை விட்டு மனந்திரும்ப வேண்டும் (அப். 17:30).
4. இயேசு தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும் (ரோமர் 10:9).
5. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் திருமுழுக்கு பெற வேண்டும் (அப். 2:38).

– உங்கள் அண்ணன் **JP**

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. மரித்துப்போன எலிசாவின் மூலம் நடந்த வியக்கத்தக்க அற்புதம் என்ன?
2. யோசேப்பு அண்ணனிடம் இருந்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?
3. அப்சலோம் யாரைப் பழிவாங்க சதித்திட்டம் போட்டான்?
4. எலியாவுக்கு உணவு கொண்டு வந்தது யார்?
5. எலியாவைப்போல நாம் எதைச் செய்தால் தேவன் நம்மீது பிரியமாயிருந்து, காப்பார்?

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | A. சுபிக்ஷா | - | பெருமாள் வலசு |
| 2. | A. ஹானா ஜோதிராணி | - | மதுரை |
| 3. | M. ஜோனத்தான் | - | கரூர் |
| 4. | D. டே∴ப்னி | - | சென்னை |
| 5. | D. ஜுனித்தா | - | சென்னை |
| 6. | A. சாம் குமார் | - | பெருமாள் வலசு |
| 7. | S. ஜோசுவா | - | ராணிபேட்டை |
| 8. | A. ஆடின் ∴பேபியோ | - | ராணிபேட்டை |
| 9. | A. ஆலன் காலேப் | - | ராணிபேட்டை |
| 10. | S. ஜுடித் ஆராதனா | - | ராணிபேட்டை |
| 11. | V. ஏஞ்சல் ஜோயன்னா | - | மதுரை |
| 12. | M. அபி பிலேமோன் | - | எழுகம்வலசு |
| 13. | J. நவீன் பீட்டர் | - | மதுரை |
| 14. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | - | மதுரை |
| 15. | S. ஜுடா லியோ | - | ரஸ்தா |
| 16. | G. ஜெர்லின் | - | ரஸ்தா |

# ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க...



## மார்ச்

| | காலை மாற்கு | | மாலை எண்ணாகமம் | |
|---|---|---|---|---|
| 1. | 7:14-37 | ☐ | 23-25 | ☐ |
| 2. | 8:1-21 | ☐ | 26,27 | ☐ |
| 3. | 8:22-38 | ☐ | 28-30 | ☐ |
| 4. | 9:1-29 | ☐ | 31-33 | ☐ |
| 5. | 9:30-50 | ☐ | 34-36 | ☐ |
| | | | **உபாகமம்** | |
| 6. | 10:1-31 | ☐ | 1,2 | ☐ |
| 7. | 10:32-52 | ☐ | 3,4 | ☐ |
| 8. | 11:1-18 | ☐ | 5-7 | ☐ |
| 9. | 11:19-33 | ☐ | 8-10 | ☐ |
| 10. | 12:1-27 | ☐ | 11-13 | ☐ |
| 11. | 12:28-44 | ☐ | 14-16 | ☐ |
| 12. | 13:1-20 | ☐ | 17-19 | ☐ |
| 13. | 13:21-37 | ☐ | 20-22 | ☐ |
| 14. | 14:1-26 | ☐ | 23-25 | ☐ |
| 15. | 14:27-53 | ☐ | 26,27 | ☐ |
| 16. | 14:54-72 | ☐ | 28,29 | ☐ |
| 17. | 15:1-25 | ☐ | 30,31 | ☐ |

| | காலை மாற்கு | | மாலை உபாகமம் | |
|---|---|---|---|---|
| 18. | 15:26-47 | ☐ | 32-34 | ☐ |
| | | | **யோசுவா** | |
| 19. | 16 | ☐ | 1-3 | ☐ |
| | **லூக்கா** | | | |
| 20. | 1:1-20 | ☐ | 4-6 | ☐ |
| 21. | 1:21-38 | ☐ | 7-9 | ☐ |
| 22. | 1:39-56 | ☐ | 10-12 | ☐ |
| 23. | 1:57-80 | ☐ | 13-15 | ☐ |
| 24. | 2:1-24 | ☐ | 16-18 | ☐ |
| 25. | 2:25-52 | ☐ | 19-21 | ☐ |
| 26. | 3 | ☐ | 22-24 | ☐ |
| | | | **நியாயாதிபதிகள்** | |
| 27. | 4:1-30 | ☐ | 1-3 | ☐ |
| 28. | 4:31-44 | ☐ | 4-6 | ☐ |
| 29. | 5:1-16 | ☐ | 7,8 | ☐ |
| 30. | 5:17-39 | ☐ | 9,10 | ☐ |
| 31. | 6:1-26 | ☐ | 11,12 | ☐ |

★ கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகளை வாசித்து முடித்தவுடன் அருகில் உள்ள கட்டத்தில் ☑ செய்யவும்..

**வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ள: 92 4421 4421, 92 4431 4431**

அடுத்த இதழில்...

## பொதுவான செய்திகள்

### தமிழ்நாட்டின் நிர்வாக பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டங்கள் | - 38 | வருவாய் கோட்டங்கள் | - 94 |
| மக்களவைத் தொகுதிகள் | - 39 | தாலுகாக்கள் | - 316 |
| சட்டமன்றத் தொகுதிகள் | - 234 | ஊராட்சி ஒன்றியங்கள் | - 388 |
| மாநகராட்சிகள் | - 25 | டவுன் பஞ்சாயத்துகள் | - 490 |
| நகராட்சிகள் | - 137 | கிராம பஞ்சாயத்துகள் | - 12,525 |

# எலிசாவின் அற்புதம் மற்றும் மரணம்



கடவுளுடைய செல்லங்களா... எப்படி இருக்கிறீர்கள்? சென்ற மாதம் கிருபையுள்ள வார்த்தை பத்திரிகையில் சிறுவர் பைபிள் சம்பவம் படித்தீர்களா?

இப்பக்கூட எலிசாவின் அற்புதம் மற்றும் அவரின் மரணத்திலிருந்து சூப்பரான பாடம் கற்றுக் கொள்ளலாமா?

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எலிசா என்ற ஒரு பெரிய தீர்க்கத்தரிசி இருந்தார். கடவுள் அவருக்கு நிறைய அற்புதங்களைச் செய்ய வல்லமை கொடுத்திருந்தார். அவர் பல நோயாளிகளை குணப்படுத்தினார், பசியோடு இருந்தவர்களுக்கு உணவு கொடுத்தார். ஏன் இறந்தவர்களைக் கூட உயிரோடு எழுப்பியிருக்கிறார்!

## எலிசாவின் நோய் மற்றும் மரணம்:

காலங்கள் உருண்டோடின. எலிசாவுக்கு வயதாகிவிட்டது. ஒருமுறை அவருக்குப் பலத்த நோய் வந்து, உடல் நலம் சரியில்லாமல் போனது. அப்போது இஸ்ரவேலின் ராஜாவான யோவாஸ், எலிசாவைப் பார்க்க ஓடிவந்தார். எலிசா இறக்கப்போகிறார் என்று தெரிந்ததும் ராஜா அழுதுகொண்டே, என் தகப்பனே! என்று வருந்தினார்.

எலிசா சாகும் தருவாயிலும் ராஜாவுக்கு தைரியம் சொல்லி, இஸ்ரவேல் நாடு வெற்றிப் பெறும் என்று ஆசீர்வதித்தார். ஆதன் பிறகு, எலிசா அமைதியாகக் கண்மூடினார் (இறந்துபோயிட்டார்) மக்கள் அனைவரும் துக்கத்துடன் அவரை ஒரு கல்லறையில் அடக்கம் செய்தார்கள்.

## ஒரு வியக்கத்தக்க அற்புதம்:

எலிசா இறந்து ஓராண்டு முடிந்தது. ஒருநாள் சில மனிதர்கள் மரித்துப்போன ஒருவருடைய உடலை அடக்கம் செய்வதற்காக கொண்டு சென்றார்கள். அப்போது திடீரென்று எதிரி நாட்டுப் போர்வீரர்கள் (மோவாபியர்கள்) அந்தப் பக்கமாக வருவதைக் கண்டார்கள்.

பயந்துபோன அந்த மனிதர்கள், தங்கள் சுமந்துகொண்டு வந்த உடலை அங்கே இருந்த ஒரு கல்லறையில் அவசரமாகப் போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். அந்தக் கல்லறை வேறு யாருடையதுமல்ல, அது எலிசாவுடையது!

## நடந்தது என்ன தெரியுமா?

1. அந்த மனிதனின் உடல் எலிசாவின் எலும்புகள் மேல்பட்டது.
2. பட்டமாத்திரத்திலேயே, இறந்துபோயிருந்த அந்த மனிதன் உயிரோடு எழுந்து நின்றான்! (2 இராஜா 13:21)
3. இதை பார்த்த அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

## நாம் கற்றுக்கொள்ளும் பாடம்:

எலிசா உயிரோடு இருக்கும்போது மட்டுமல்ல, அவர் மரித்த பிறகும் அவருடைய எலும்புகளில்கூட கடவுளின் வல்லமை இருந்தது.

கடவுளுக்குப் பிரியமானவர்கள் செய்யும் நல்ல காரியங்களும், அவர்களின் விசுவாசமும் அவர்கள் மரித்த பிறகும் இந்த உலகத்திற்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்பதே இந்த சம்பவத்தின் உண்மை.

கடவுளின் செல்லங்களா! இந்த எலிசாவைப்போல, நீங்களும் பசியுள்ள மற்றவர்களுக்கு உங்கள் உணவை பகிர்ந்து கொடுப்பீர்களா? வியாதியுள்ளவர்களுக்கு உதவி செய்வீர்களா?

இந்த பத்திரிகையில் உள்ள பைபிள் சம்பவத்தை மற்றவர்கள் படிக்க உதவி செய்வீர்களா?

கஷ்டமான நிலையிலும் உங்கள் அம்மா, அப்பா, உடன்பிறந்தவர்கள், நண்பர்கள் இவர்களிடம் ஆறுதலாக ஊக்கப்படுத்தும் வார்த்தைகளை பேசுவீர்களா? நல்ல சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்வீர்களா? கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: யாக்கோபு 4:17**

"ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்."


— சகோ. அன்பு ஏசுதாஸ்

சிறுவர் பகுதி

# யோசேப்பு விற்கப்படுதல்

சர்வ வல்லமையுள்ள கர்த்தருக்கு பிரியமான குட்டிச் செல்லங்களே! நன்றாக உள்ளீர்களா? மீண்டும் இந்த மாதம் உங்களோடு பேசுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஆதியாகமம் 37-ம் அதிகாரத்தில், யோசேப்பு அண்ணனை குறித்துப் படிக்கலாம்.

கானான் என்னும் ஊரிலே யாக்கோபு என்னும் மனிதர் வாழ்ந்து வந்தார். இவருக்கு அநேக மகன்கள் இருந்தார்கள். அதில் கடைசி மகன் பெயர் தான் யோசேப்பு. உங்களைப் போன்று யோசேப்பு அண்ணாவும், மிகவும் அழகும், அறிவும், சாமர்த்தியமும் உள்ளவர். யோசேப்பு அண்ணாவின், அண்ணன்மார்கள் சில தீமையான காரியங்களை செய்து கொண்டு வந்தனர். அந்த சமயத்திலே இதை பார்த்துக்கொண்டு இருந்த யோசேப்பு அண்ணா தன் அப்பா யாக்கோபிடம் போய் சொல்வான். ஆனால் யோசேப்பு அண்ணன் எந்த தீமையும் செய்ய மாட்டான். இதனால் யாக்கோபுக்கு அவனை மிகவும்



பிடிக்கும்.

ஒருநாள் ஆடுகளை மேய்ப்பதற்காக யோசேப்பின் அண்ணன்மார்கள் எல்லாரும் வனாந்தரத்திற்கு போய்விட்டார்கள். அப்பொழுது அப்பா யாக்கோபு, யோசேப்பு அண்ணாவை அழைத்து நீ போய் அண்ணன்கள் எல்லாரும் ஆடுகள் மேய்க்க போனார்கள். அவர்கள் ஆடுகளை சரியாக மேய்க்கிறார்களா என்று பார்த்துக் கொண்டும், அவர்கள் தீமையான காரியங்கள் செய்கிறார்களா என்றும் பார்த்துக் கொண்டு வந்து என்னிடம் சொல்லு என்று அனுப்பினான். யோசேப்பு அண்ணாவும் சரி நான் போகிறேன் என்று சொல்லி விட்டு, நெடுந்தூரம் நடந்து சென்றான். அவனுடைய அண்ணன்கள் எங்கே ஆடுகள் மேய்க்கிறார்கள் என்று அவன் கண்களுக்கு தெரியவில்லை. வழியில் ஒருவரை சந்தித்து விசாரித்துக் கொண்டு செல்கிறான்.

அப்படியே யோசேப்புவின் அண்ணன்கள் அவன் தூரத்தில் வருகிறதைக் கண்டு, இவன் தனியாகத்தான் வருகிறான். இவனைக் கொன்று விட்டால் நாம் செய்கிற தீமையான காரியங்களை பற்றி அப்பாவிடம் சொல்ல முடியாது என்று ஆலோசனை பண்ணினார்கள். அதில் யூதா என்பவன் இவனைக் கொல்ல வேண்டாம். யாரிடத்திலாவது விற்றுவிட்டால் நமக்கு பணமும் கிடைக்கும், இவன் உயிரோட இருப்பான் என்றான். இப்படியாக யோசேப்பு அண்ணாவை விற்று விட்டார்கள்.

எனக்கு பிரியமான செல்லங்களா! யோசேப்புவின் அண்ணன்கள் எல்லாரும் தீமையை செய்தார்கள். அதை கண்ட யோசேப்பு அண்ணன் அவர்களோடு எதிர்த்து நிற்காமல், நீங்கள் தவறு செய்கிறீர்கள் என்று சண்டைக்குப் போகவில்லை. மாறாக தன் அப்பாவிடம் சொன்னான். இதிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்வது என்ன?

எனக்கு அன்பான குழந்தைகளே நம் பரிசுத்த கடவுளாக இருக்கிற இயேசு கிறிஸ்துவானவர் தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் என்று சொல்லுகிறார். தீமை செய்கிறவர்களோடு கலந்து கொள்ளக்கூடாது என்று சொல்லுகிறார். தீமை செய்கிறவர்களிடம் எதிர்த்து நிற்பதோ, சண்டை போடுவதோ கூடாது என்று சொல்லுகிறார்.

மாறாக நாம் செய்வது என்னவென்றால், தீமை செய்கிறவர்களை குறித்து சர்வ வல்லமை உள்ளவரும் எல்லா அதிகாரத்திற்கு மேலான அதிகாரம் கொண்ட பரிசுத்த பிதாவிடம் ஜெபிக்க வேண்டும் என்று சொல்லுகிறார். அப்படியே நீங்களும் தீமை செய்கிறவர்களுக்காக ஜெபியுங்கள். உங்களுக்கு தீமை செய்கிறவர்களை குறித்தும் பிதாவிடம் பிரார்த்தனை செய்யுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

**மனப்பாட வசனம்: ரோமர் 12:21**

"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு."

— சகோ. பீட்டர்

சிறுவர் பகுதி

# அப்சலோமின் சதித்திட்டம்

செல்லப்பிள்ளைகளா!!! அனைவரும் நலமா? கர்த்தருடைய நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!. பரிசுத்த கர்த்தர் தாமே உங்கள் அனைவருடனும் இருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

இந்த வருடத்தின் இரண்டாம் மாதத்திலே பூமியில் வாழ்ந்த ராஜாக்களிலியே மிகப்பெரிய ராஜ்ஜியத்தை ஆட்சி செய்த தாவீது ராஜாவின் மகன் அப்சலோம் செய்த சதித்திட்டத்தைக் குறித்து படிக்கப் போகிறோம். படிக்கலாமா? வாங்க படிக்கலாம்.

தாவீது ராஜாவின் மகன்களில் ஒருவர்தான் அப்சலோம், தாவீது ராஜாவிற்கும் அப்சலோமிற்கும் இடையில் மிகப்பெரிய இடைவெளி நிலவியது. அதவாது அவர்கள் இருவருக்கும் இடையில் சமாதானம் இல்லாத நிலை நிலவியது. அப்சலோம் தன்னுடைய தகப்பனாகிய தாவீதை முழுவதுமாக வெறுத்தான். ஆனால் தாவீது தன்னுடைய மகன்மீது அன்பு உடையவராகக் காணப்பட்டார். இப்படியிருக்க அப்சலோம் காலைதோறும் எழுந்து நகரத்தின் வாசல் அண்டையில் நின்று. ராஜாவினிடம் தன்னுடைய வழக்கு விசாரிக்கப் படும்படிக்கு செல்கின்ற எவராகிலும் செல்லும்போது, அவனை அழைத்து, நீ எந்த ஊரைச் சேர்ந்தவன் என்று கேட்பான். அவன் பதிலுக்கு நான் இஸ்ரயேலைச் சேர்ந்த கிராமத்தில் இருந்து வருகிறேன் என்று சொன்னால், அப்பொழுது அப்சலோம் அவனைப் பார்த்து உன்னுடைய வழக்கு நேர்மையும் நியாயமு மாயிருக்கிறது. ஆனாலும் ராஜாவினிடத்தில் உன் வழக்கை நியாயமாக விசாரிப்பவர் ஒருவரும் இல்லை என்பான் மற்றும் அப்சலோம் வழக்கு நிலுவையில் உள்ள அனைவரும் என்னிடத்தில் வந்து நான் அவர்களுக்கு சரியான நியாயம் விசாரிக்கும்படிக்கு என்னை இந்த தேசத்திலே நியாயாதிபதியாக



ஏற்படுத்தினால் உங்களுக்கு நலமாக இருக்கும் என்று கூறுவான். இதைப் போன்றே எவனாவது ஒருவன் தன்னை வணங்க வரும்போது அவன் தன் கையை நீட்டி அவனைத் தழுவி முத்தம் செய்வான். இதைப் போன்றே அப்சலோம் தொடர்ச்சியாக நாற்பது வருடங்கள் செய்துகொண்டு வந்தான். அதனால் அனேகருடைய இருதயத்தை தன் வசப்படுத்தியிருந்தான்.

மக்களுடைய இருதயத்தை நேர்மையான வழியில் கவர்ந்திழுக்காமல் வஞ்சகமான முறையில் கவர்ந்திழுத்தான். பிறகு அப்சலோம் தாவீது ராஜாவினிடத்தில் சென்று, நான் கர்த்தருக்குப் பண்ணின என்னுடைய பொருத்தனையை எப்ரோனில் செலுத்தும்படிக்கு நான் போக அனுமதி கொடுங்கள் என்று வேண்டிக் கொண்டான். பின்பு அப்சலோம் தன்னோடு திரளான மக்களைச் சேர்த்துக்கொண்டு தாவீது ராஜாவிற்கு எதிராகத் திரும்பினான். அதிகப்படியான மக்கள் அப்சலோமின் பின்னால் திரண்டிருப்பதைப் பற்றி அறிந்துகொண்ட தாவீது ராஜா, தன்னுடைய இருக்கையை விட்டு எழுந்து தன்னை நம்பி இருந்தவர்களையும் அழைத்துக்கொண்டு வெளியே சென்றான். அப்சலோம் மற்றும் அவனது படையினரும், தாவீது மற்றும் அவரது படையினரும் யுத்தத்திற்கு தயாராயினர். இருவரும் போரிட்டதில் அன்றைய நாளில் ஏறக்குறைய இருபதினாயிரம் பேர் மடிந்தனர்.

போர்க்களத்தில் அப்சலோம் தாவீது ராஜாவினுடைய சேவகர்களுக்கு எதிராகப் போகையில், கர்வாலி மரத்தின் பின்னலான கிளையில் மாட்டி தொங்கிக் கொண்டு இருந்தான். அப்பொழுது யோவாபின் ஆயுதப்படையினர் பத்துபேர் அவனைக் கொன்று போட்டார்கள். தன்னுடைய தகப்பனுக்கு எதிராகப் புறப்பட்ட மகன், தன்னுடைய தகப்பனை பழிவாங்க சதித்திட்டம் செய்தான். ஆனாலும் கர்த்தர் தாவீது ராஜாவின் பக்கம் இருந்தார். எந்த ஒரு சூழ்நிலையிலும் நாம் நேர்மையில்லாத எந்த செயலையும் செய்யக்கூடாது. கர்த்தர் எப்பொழுது நேர்மையானவனுக்கு துணை இருப்பார். அப்சலோம் மக்களிடம் வஞ்சகமான முறையில் பேசி அவர்களை கவர்ந்திழுத்து தன்னுடைய தகப்பன் தாவீது ராஜாவை கொலைசெய்ய முயற்சித்தான். ஆனால் கர்த்தர் தன்னுடைய வார்த்தைக்குச் செவிகொடுக்கும் தாவீது ராஜாவை பாதுகாத்தார்.

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 9:6**

"பேதமையை விட்டு விலகுங்கள், அப்பொழுது பிழைத்திருப்பீர்கள்; புத்தியின் வழியிலே நடவுங்கள் என்று விளம்புகிறது."

**– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்**

சிறுவர் பகுதி

## எலியா காகத்தினால் போஷிக்கப்படுதல்

ஹாய் குட்டீஸ்! நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? கர்த்தரின் கிருபையினால் நலமாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன். பிள்ளைகளா! இந்த மாதம் உங்களோடு ஒரு வேதாகம சம்பவத்தை பற்றி பகிர்ந்து கொள்வதில் அளவில்லா மகிழ்ச்சி... 1 இராஜாக்கள் 17ம் அதிகாரம்

கர்த்தரின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து, அவர் என்ன சொன்னாலும் மிகவும் தைரியமாகவும், துணிச்சலுடன் காரியங்களை செய்யக்கூடிய மிகப்பெரிய தீர்க்கதரிசி அவர். அவரது பெயர்தான் எலியா.

அந்நாட்களிலே அரசாண்ட ஆகாப் ராஜாவும், ஜனங்களும் செய்த பாவத்தினால் அந்த தேசத்தில் மழையும், பனியும் பெய்யாதிருக்குமென தேவன் சொல்லி, அந்தபடியே செய்தார். அதினாலே அந்தேசத்திலே மிகவும் கொடிய பஞ்சம் வந்தது. அப்பொழுது கர்த்தர் எலியாவை நோக்கி; நீ போய் கேரீத் ஆற்றண்டையிலே இரு. அங்கே உன்னைப் போஷிப்பேன் என்றார். எப்படி தெரியுமா குட்டீஸ்? தேவன் அற்புதமாக காகத்தின் மூலம் எலியாவுக்கு தினமும் அப்பமும், இறைச்சியும் கொடுத்தார். எவ்வளவு ஆச்சரியம் பார்த்தீர்களா! காகம் பொதுவாக நம்மிடமிருந்து திண்பண்டங்களை பிடுங்கி தின்னும். ஆனால் தேவனோ அதின் குணாதிசயங்களை மாற்றி, தனது தீர்க்கதரிசிக்கு உணவைக் கொண்டு செல்லுகிற வேலையை அதற்கு கொடுத்தார். அதுவும் அப்படியே தேவனுடைய சொல்லிற்கு கீழ்ப்படிந்தது. காரணம் என்னவென்றால், தேவனை நேசித்து, அவருக்கு கீழ்ப்படிகிற யாரையும் ஒருநாளும் பசியினால் வருந்த விடமாட்டார்.



பிள்ளைகளே! தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யாதபடிக்கு அவர் சொல்லுக்கு கீழ்ப்படியும்போது இந்த எலியா தீர்க்கதரிசிக்கு செய்ததுபோலவே தேவன் நிச்சயம் நம்மையும் பாதுகாத்து வழிநடத்துவதை நாம் நமது வாழ்க்கையில் உணரமுடியும். ஆமென்.

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 10:3**

"கர்த்தர் நீதிமான்களைப் பசியினால் வருந்தவிடார்"

**– சகோ. ஜான் செல்லையா**

## பிப்ரவரி மாத கேள்விகள்
(மாற்கு சுவிசேஷ புத்தகத்தில் இருந்து)

1. சகல ஜாதிகளுக்கும் (இனங்களுக்கும்) முந்தி பிரசங்கிக்கப்பட வேண்டியது என்ன?
2. யார் இரட்சிக்கப்படுவான் என்று இயேசு கூறினார்?
3. அந்த நாளையும் நாழிகையையும் அறிந்திருக்கிறவர் யார்?
4. இயேசு சீமோன் வீட்டில் பந்தியிருக்கையில் ஒரு ஸ்திரீ கொண்டு வந்தது என்ன?
5. எதற்கு உட்படாதபடி விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டும்?
6. இயேசுவை சிலுவையில் அறைந்தது எத்தனை மணி வேளையாயிருந்தது?
7. இயேசு எழுந்திருந்த பின் முதல் முதல் யாருக்கு தரிசனமானார்?
8. எதை விசுவாசியாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்?
9. தூரத்தில் இயேசுவுக்கு பின் சென்றவன் யார்?
10. கனம்பொருந்திய ஆலோசனைக்காரன் யார்? அவன் எது வரக்காத்திருந்தான்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-03-2026**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. மாற்கு 6:21 | 6. மாற்கு 10:14 |
| 2. மாற்கு 7:34 | 7. மாற்கு 10:23 |
| 3. மாற்கு 8:33 | 8. மாற்கு 10:46,47 |
| 4. மாற்கு 9:23 | 9. மாற்கு 12:13 |
| 5. மாற்கு 9:49 | 10. மாற்கு 12:42,44 |

### சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) | G. ஏஞ்சலம்மாள் | - | மதுரை |
| 2) | Mrs. M. ஈஸ்வரி முருகன் | - | கரூர் |
| 3) | Mrs. C. வள்ளி சிதம்பரம் | - | கரூர் |
| 4) | M. ராஜா | - | கரூர் |
| 5) | Y. ஜெயசுதா பொன்செல்வி | - | சென்னை |
| 6) | A. கார்பஸ் பிலேமோன் | - | மதுரை |
| 7) | Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் | - | தூத்துக்குடி |
| 8) | Mrs. தெல்மா ஸ்டான்லி | - | மதுரை |
| 9) | Mrs.P. சமாதானம் பீட்டர் | - | விருதுநகர் |
| 10) | Mrs. ஹெலன் திலக் | - | தூத்துக்குடி |
| 11) | J. ஜான்சி | - | ஆனைமலை |
| 12) | A. ரோஸ்மேரி | - | சென்னை |
| 13) | S. ஜெபமணி | - | தென்காசி |
| 14) | T. பால்வின் | - | கன்னியாகுமரி |
| 15) | R. ஞானசிரோன்மணி | - | மதுரை |
| 16) | A. டேவிட் ஜெயசந்திரன் | - | மதுரை |
| 17) | S. ஷீபா ஞானவின்சா | - | டோனாவூர் |
| 18) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | - | மதுரை |
| 19) | J.V. சுந்தரபாய் வில்லியம் | - | சேலம் |
| 20) | A. லலிதா | - | புதுக்கோட்டை |
| 21) | P. ரேச்சல் ஜானிமா | - | நெல்லை |
| 22) | Mrs. சாந்தி வில்லியம் | - | புதுக்கோட்டை |
| 23) | Mrs. பியூலா ஜேசுராஜன் | - | புதுவை |
| 24) | Mrs. R. சரோஜா | - | தென்கலம் |
| 25) | S.G. சேகர் | - | இராணிபேட்டை |
| 26) | Mrs. சுகுணா தமலின் | - | தூத்துக்குடி |
| 27) | N.V. அஜிதா சுபின் | - | மார்த்தாண்டம் |
| 28) | S. டேவிட் சாந்தகுமார் | - | செங்கோட்டை |
| 29) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | - | சேலம் |
| 30) | Mrs. சாந்தி ஜோயல் | - | திருச்சி |
| 31) | Mrs. பெட்ரீஷியா டேவிட் | - | சேலம் |
| 32) | Mrs. A. இமல்டா சுந்தர்சிங் | - | ஈரோடு |
| 33) | C. வைலட் கிறிஸ்டோபர் | - | தளவாய்புரம் |
| 34) | Mrs. சூரிய பிரியா | - | மதுரை |
| 35) | Mrs. J. பூங்கொடி ரவி | - | முத்தூர் |
| 36) | Mrs.D. குளோரி திலகவதி | - | சென்னை |
| 37) | Mrs. இந்திரா பாண்டி | - | மதுரை |
| 38) | S. பேபி சந்தோஷ்குமார் | - | தங்கமேடு |
| 39) | M. அன்பழகன் | - | தங்கமேடு |
| 40) | S. பாக்கியராஜம் | - | மதுரை |
| 41) | N. ஜான் செல்லையா | - | மதுரை |
| 42) | Mrs. J. ஜெயராணி ஜான் | - | மதுரை |
| 43) | Mrs. ராணி குமரன் | - | கரூர் |
| 44) | S. கார்த்திக் | - | கரூர் |
| 45) | Mr. தாமஸ் ராபின்சிங் | - | பெரம்பலூர் |
| 46) | Mrs. ஹெப்ஸிபா தாமஸ் | - | படப்பை |
| 47) | Mrs. தேவி ராஜாசிங் | - | திருப்பூர் |
| 48) | Mrs. பிளாரன்ஸ் முத்தையா | - | மதுரை |
| 49) | Mrs. ஆட்லின் ஆனந்தன் | - | மதுரை |
| 50) | A. அரவிந்த் | - | மதுரை |
| 51) | Mr. டேவிட் ராஜ் | - | அனவரதநல்லூர் |
| 52) | Mrs. பெரில் பாஸ்கர் | - | படப்பை |
| 53) | Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் | - | நெல்லை |
| 54) | J. கிறிஸ்டோபர் தாஸ் | - | நாகர்கோயில் |

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : 45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 📖 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th February 2026
Posted at Arasaradi HPO on 10th & 11th February 2026


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH







AVAILABLE FOR SPECIAL PRICE!


If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To